இந்தி வெறியர்களின் மூக்கறுப்பு!

REGD. No. M. 6311 PHONE No. 55630

நம் நாடு

தி.மு.க.வின் இதழ் ஆசிரியர்: அண்ணாதுரை

The "Nam Nadu": A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F

தனி இதழ்: ஓரணா. இலங்கையில் 10 சதம் | சென்னை: புரட்டாசி 9உ சனி (25—9—54) | வெளியூர்: புரட்டாசி 10உ ஞாயிறு (26—9—54) | மலர்: 2 இதழ்: 89

காங்கிரஸ்காரர்கள் தீர்மானத்தின் கதி

திராவிட காங்கிரஸ் உறுப்பினர் அரும் பணி

சட்டங்கள் இந்தியில் மொழிபெயர்ப்பது பற்றிய தீர்மானம் மக்கள் சபையில் தோற்றது

இந்தியை, இந்தியத் துணைக் கண்டத்தின் அரசியல் மொழியாகத் திணித்துவிட வேண்டுமென்பது வடவரின் வேலை!

அதற்கான ஏற்பாட்டை அரசியல் சட்டத்திலும் வலுவில் புகுத்திக் கொண்டுள்ளனர்!

இக்கொடு முயற்சியால், பொதுவாக பிறமொழிகள், அதிலும் குறிப்பாகத் திராவிட மொழி, கலை, பண்பு கெடும் என்பது மற்ற மொழி அறிஞர்களின் முடிவு. கட்சி மாறுபாட்டைக் காரணமாக இந்தியை ஆதரிக்கும் காங்கிரஸ் திராவிடரும், மேற்கண்ட முடிவை முழு அளவில் ஒப்புகின்றனர்.

மக்கள் சபையில் இந்தி மொழி பற்றிய பிரச்சினை எழும் பொழுதெல்லாம், கட்சி வேறுபாடு சிறிதும் இல்லாது தென்னாட்டிலிருந்து சென்றுள்ள திராவிட மக்கள் சபை உறுப்பினர்கள் இந்தி ஆதிக்க வெறியை மட்டந்தட்டத் தவறுவது கிடையாது.

ஆங்கில மொழியில் உள்ள மத்திய சர்க்கார் சட்டங்கள் அனைத்தையும் இந்தி மொழியில், உடனடியாக மொழி பெயர்ப்பதற்காக ஒரு குழுவை நியமிக்க வேண்டுமென, பீகாரைச் சேர்ந்த, திருமதி தாரகேஸ்வரி சின்ஹா ஒரு தீர்மானம் கொண்டுவந்தார்.

அத்தீர்மானத்தைக் குறித்து தாபாய் என்ற உறுப்பினர் பேசும் பொழுது, இந்தியில் மொழி பெயர்க்கப்பட்ட அரசியல் சட்டத்தில் உள்ள அடிப்படை உரிமை பற்றிய ஒரு முக்கிய விதி, அதன் உண்மையான பொருளுக்கு முற்றும் மாறான பொருள் தருவதாக இருக்கிறது எனக் குறிப்பிட்டார்.

சட்டங்களை மொழி பெயர்க்கும் பணி புரிவதற்கு, இந்தி மொழி நுட்பம் உணர்ந்துள்ள திறமை மிக்க வழக்கறிஞர்கள் கிடைப்பது அரிதாக இருக்கிறது என சட்ட அமைச்சர் அலறினார்.

சட்டங்களை இந்தியாக்கும் முயற்சியில் மத்திய சர்க்காருக்கே போதிய அக்கறை இருப்பதால், அதற்கென தனித் தீர்மானம் எதுவும் தேவை இல்லை என அந்த அமைச்சர் அறிவித்தார்.

தீர்மானத்தை திரும்பப் பெற காங்கிரஸ் உறுப்பினரான அம்மையார் ஒப்பவில்லை.

இந்தி வெறிக்கு இமயம்போல் உள்ள புருஷோத்தமதாஸ் தாண்டன் உள்பட, இந்தி ஆதிக்கக்காரர்கள் அனைவரும் தீர்மானத்தை ஆதரித்து வாக்களித்தனர்.

தென்னாட்டு திராவிட காங்கிரஸ் உறுப்பினர் அனைவரும், சில அமைச்சர்கள் உள்பட, தீர்மானத்திற்கு எதிராக வாக்களித்து, இந்தி வெறியர்களின் மூக்கை அறுத்தனர்.

சார்பாக 37 வாக்குகளும், எதிராக 68 வாக்குகளும் பெற்று தீர்மானம் படுதோல்வியுற்றது!

மக்கள் நலத்தை மறந்தோர் ஆட்சியில்...!

லட்சம் லட்சமாகப் பணம் பாழாகிறது!

சௌராஷ்டிர மாநிலத்தில் நடைபெறும் காங்கிரஸ் ஆட்சி, உணவுத் தானிய வினியோகத் திட்டத்தினால் சுமார் 147 இலட்சம் ரூபாய் நஷ்டமடைந்திருக்கிறது. இதுமட்டுமின்றி வரவு - செலவுத் திட்டத்தில் உள்ள சீர்கேடுகளின் விளைவாக பல இலட்சம் ரூபாய்களை இழந்துள்ளது.

"உணவுத் தானியங்களை இலாபமுமின்றி, நஷ்டமுமின்றி மக்களுக்கு வினியோகிப்பது என்ற திட்டத்திற்காக ரூ 3 கோடி ... செய்ததில் சுமாராக ... இவ்வளவு-ரூ 147 இலட்சம் நஷ்டமடைந்திருக்கின்றனர், ஆட்சியினர்!

மருந்தும், காலணிகள், செருப்புகள், எஃகு சாமான்கள், ஒயின், கைக்கடிகாரங்கள் முதலிய சாமான்களை வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்தவற்றை, உரிய காலத்தில் விற்பனை செய்யாமற் போனதினால் சுமார் 25 இலட்சம் ரூபாய் அரசாங்கத்திற்கு நஷ்டம் ஏற்பட்டுள்ளது.

மேலே கண்ட சாமான்களை காலங்கடந்து கவனித்ததின், அவற்றில் பெரும் பகுதி, மக்களின் உபயோகத்திற்கு இலாயக்கற்றதாக மாறிவிட்டதினால், சுமார், ரூ 7 லட்சம் பெறுமான பொருள்கள் ரூ ... ஆயிரத்திற்கு விற்கப்பட்டனவாம். அவ்வகையிலும் பல லட்சம் ரூபாய் பாழாகி யிருக்கிறது.

இன்னும் தொடர்ந்து, சௌராஷ்டிர சர்க்காரின் வரவு—செலவுக் கணக்குகள், தணிக்கைக் குழுவினரால் பரிசீலிக்கப்பட்டு வருகிறதாம்.

... விசாரணை ஆரம்பிக்கப்பட்ட ..., ... திட்டம் ரூ 82,000 நஷ்டத்தில் முடிந்திருக்கிறதாம்.

இவ்வாறாக பல துறைகளில்

சௌராஷ்டிர சர்க்கார் சுமார் ஒன்றரைக் கோடி ரூபாயில், மக்களின் வரிப் பணத்தைப் பாழ்பண்ணி யிருக்கின்றனர்," என்று தணிக்கையாளர் குழுவின் அறிக்கை கூறுகிறது.

தென்னாப்பிரிக்க நிறவெறி!

ஐ. நா. விவாதிக்கும்?

தென்னாப்பிரிக்க இனவேற்றுமைக் கொள்கைகளை, ஐ. நா. சபையில் விவாதத்துக்கு எடுத்துக்கொள்ள வேண்டுமென்று ஐ. நா. சபை நடைமுறைக் குழு சிபாரிசு செய்ததை ஆட்சேபிக்கும் முறையில், அந்தப் பிரச்சினைகள் உள்நாட்டு விஷயமென்றும், அவைகளை ஐ. நா. சபையில் எடுத்துக்கொள்ளக் கூடாதென்றும் தென்னாப்பிரிக்கப் பிரதிநிதி ஏற்கனவே தெரிவித்திருக்கிறார்.

ஆனால், ஐ. நா. சபை நடைமுறைக் குழுவினர் அதை ஏற்றுக்கொள்ளவில்லையென்றும், எவ்வித வாக்குப்பதிவுமின்றி இன்னமலேயே அந்தப் பிரச்சினையை விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளத் தீர்மானிக்கப்பட்டது என்றும் தெரியவருகிறது.

பாங்கி ஊழியர் வேலை நிறுத்தம்

மக்கள் சபையில் அவசரப் பிரேரணை

சபாநாயகர் நிராகரித்தார்

புதுடில்லி, செப். 24—

நாட்டில் உள்ள பல்வேறு பாங்கி ஊழியர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டதினால் ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலை குறித்து விவாதிக்க வேண்டும் என்று மக்கள் சபையில், மைசூரைச் சேர்ந்த உறுப்பினர் குருபாதசாமி கொண்டுவந்த அவசரத் தீர்மானத்தை சபாநாயகர் நிராகரித்தார்.

புதிய தொழிலாளர் இலாக்கா மந்திரி கந்துபாய் தேசாய், பாங்கி ஊழியர் பிரச்சினை குறித்து விசாரணை நடத்த குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளபோது அப்பிரச்சினை குறித்து இப்போது சபையில் விவாதிப்பது ஒழுங்கல்ல' என்று கூறினார்.

சபாநாயகரும், ஏற்கனவே இப்பிரச்சினை விரிவாக விவாதிக்கப்பட்டிருப்பதாயும், வேலை நிறுத்தம் எதிர்பாராத ஒன்றல்ல என்றும் குறிப்பிட்டு அவசரத் தீர்மானத்தை நிராகரித்தார்.

மாநிலங்களை அடிமையாக்க மத்திய சர்க்கார் தீவிரம்

உயர்நிலைக் கல்விப் பெருக்கத்தைக் காரணமாக்குகிறது!

புதுடில்லி, செப். 24—

மத்திய சர்க்காரின் உயர்நிலை கல்விக் குழுவின் சிபாரிசுகளை அமுல் நடத்த மாநில சர்க்கார்களுக்கென இந்திய சர்க்கார் தயாரித்திருக்கும் திட்டங்களை சென்னை சர்க்கார் ஒப்புக்கொண்டு, உயர்நிலை கல்விக் குழுவின் சிபாரிசுகளை அமுல் நடத்த முன்வந்தால் சென்னை மாநிலத்தில் உள்ள 50 சதவிகித பள்ளிகளுக்கு டில்லி சர்க்காரிடமிருந்து பொருளாதார உதவிபெற முடியும் என்று தெரிகிறது.

இத்திட்டத்தை அமுல் நடத்துவது பற்றி சென்னை சர்க்கார் மத்திய சர்க்காருக்கு எவ்விதமான பதிலும் அளிக்கவில்லை எனவும் நம்பப்படுகிறது.

உயர்நிலை கல்வி குழுவின் பார்லிமெண்டரி ஆலோசனைக் குழு உறுப்பினர்களுக்கு, தோழர் டி. எஸ். அவிநாசிலிங்கம் அனுப்பியுள்ள குறிப்பொன்றில் இச்செய்தி காணப்படுகிறது.

உயர்நிலை கல்விக் குழுவின் சிபாரிசுகளை அமுல் நடத்துவதிலும், கல்விப் புனரமைப்பிலும்

(5-ம் பக்கம் பார்க்க)

... ஆதிக்கத்திலிருக்கும் மேற்கு நியூ கினியா மீது இந்தோனேஷியா கொண்டாடும் சொந்தம் குறித்து விவாதிக்க ஐ. நா. சபை சம்மதித்திருப்பதாகத் தெரிகிறது.

நிர்வாகப் பதவி வகிக்க....

மணமான மாதருக்குத் தடை!

புதுடில்லி, செப். 24—

மணமான பெண்கள் இந்திய நிர்வாக இலாகாவில் (ஐ. ஏ. எஸ்.) பணிபுரிவதற்கு விதிக்கப்பட்டுள்ள வரைமுறைகள் எல்லாவற்றையும் நீக்கிவிட வேண்டுமென்ற வாதம் டில்லி மேல் சபையில் எடுபடவில்லை.

இந்திய நிர்வாக இலாகாவின் விதிமுறைகளை, பெண்கள் மணமான பின்னும் தொடர்ந்து நிர்வாக இலாகாவில் பணிபுரிவது பற்றி கொண்டுவரப்பட்ட சட்டத் திருத்த மசோதா மீது 2½ மணி நேரம் விவாதம் நடைபெற்றது.

மணமான பிறகு பெண்கள் நிர்வாக இலாகாவில் பணிபுரிய பக்கபடாது என்பது இந்திய அரசியல் சட்டத்திற்குப் புறம்பானது என்றெல்லாம் கூட பேசப்பட்டிருக்கிறது.

விவாதத்தில் கலந்துகொண்ட உள்நாட்டு மந்திரி டாக்டர்

(4-ம் பக்கம் பார்க்க)

இந்தியா ஒப்பந்தம் செய்துகொண்ட பர்மா அரிசி!

பிரதமர் யூ-நூ விளக்கம்

"இந்தியா, பர்மாவிடம் ஒப்பந்தம் செய்துகொண்டபடி, 9 லட்சம் டன் அரிசி முழுவதையும் ஏன், இன்னும் வாங்கிக் கொள்ளாதிருக்கிறது?" என்று பர்மிய பிரதமர் யூ-நூவைக் கேட்கப்பட்டபோது, அவர் குறிப்பிட்டதாவது:—

"இன்றைய 'மார்க்கெட்' நிலவரம் மாறிவிட்டிருக்கிறது; யுத்த காலத்திற்குப் பிறகு ஏராளமான அரிசி பல நாடுகளிலும் விளைய ஆரம்பித்துள்ளது; மேலும், பல நாட்டினர் சோதனை உணவை மேற்கொள்ள முற்பட்டுவிட்டனர்; இந்தியாவிற்கும் இப்போது அதிகமான அரிசி தேவை இல்லை; பர்மாவில் ஏராளமான அரிசி குவிந்திருந்ததால், இந்தியாவை அணுகி, அரிசியை எடுத்துக் கொள்ளுமாறு கேட்டு ஒப்பந்தம் செய்துகொண்டோம்," என்றார்.

நம் நாடு

தி.மு.க. தினஇதழ் — ஆசிரியர்: அண்ணாதுரை

சென்னை 25—9—54 சனி

பாங்கி ஊழியர் நிலை உயர......!

இந்திய உபகண்டமெங்கும் உள்ள பாங்கி ஊழியர்களின் பெரும்பான்மையினர், பாங்கி ஊழியர்களுக்கான அப்பீல் மன்றத்தின் தீர்ப்பை இந்திய சர்க்கார் மாற்றியமைத்தது குறித்துத் தங்கள் எதிர்ப்பைத் தெரிவிக்கும் முறையில் ஒரு நாள் அடையாள வேலைநிறுத்தம் செய்தனர். அந்த அடையாள வேலைநிறுத்தம் மிகவும் வெற்றிகரமாகவும் அமைதியுடனும் நடத்தப்பட்டது கண்டு மகிழ்கிறோம்.

பாங்கி ஊழியர்கள் பிரச்சினையில் இந்திய சர்க்கார் கடைப்பிடிக்கும் போக்கினை நாம் ஆரம்ப முதலே கவனித்து வருகிறோம். எறக்குறைய ஒரு நீதிமன்றத்தின் தீர்ப்பைப் போன்று மதித்து அமுல் செய்ய வேண்டிய அப்பீல் மன்றத்தின் தீர்ப்பை, நேரு சர்க்கார் அவசரமாக மாற்றி அமைத்தார்கள். அப்பீல் மன்றத்தின் தீர்ப்பை மாற்றியமைத்ததற்கு நிதி அமைச்சர் தேஷ்முக் கூறிய வாதம் முதலாளித்துவ வாதமாகவும், பண்டித நேரு கூறிய காரணங்கள் தெளிவற்ற தொழில் கொள்கையைப் பின்பற்றும் அரசியல் வாதியின் வாதமாகவும் இருந்தது.

"பாங்கிகளிலே ஊழியம் செய்யும் சிப்பந்திகளை மட்டுமன்றி, பாங்கிகளில் மூலதனமிட்டிருப்போரையும், அவைகளில் பணம் சேமித்து வைத்திருப்போரையும் சர்க்கார் கவனிக்க வேண்டியிருக்கிறது; இத்தீர்ப்பை சர்க்கார் மாற்றியமைக்காவிட்டால் பல பாங்கிகள் தொழில் நடத்த இயலாது; பொது மக்களின் நன்மையைக் கருதி சமூக நீதியின் அடிப்படையில் இத்தீர்ப்பு மாற்றப்பட்டிருக்கிறது," என்று தேஷ்முக் காரணம் காட்டினார்.

பண்டித நேரு, தனக்கே உரித்தான முறையில், தனது சர்க்கார் பாங்கி ஊழியர்களுக்குத் தீங்கு செய்யும் எந்த முறையையும் கையாளாது என்றும், ஆகவே, அவர்கள் அமைதியாக இருக்க வேண்டுமென்றும் கூறினார்.

சர்க்காரின் பதவி வகித்த தொழில் அமைச்சர் கிரி, தீர்ப்பை மாற்றாது அப்படியே அமுல் நடத்த வேண்டுமென்று வற்புறுத்தி, நேருவின் தொழில் கொள்கை நாட்டு மக்களுக்கு நன்மை பயக்கும் தன்மையற்றது என்பதை உணர்ந்து, மனம் நொந்து, வேதனையுடன் பதவியை துறந்து வெளியேறினார்.

புதிதாகப் பதவி ஏற்ற தொழில் அமைச்சர் கண்டுபாய் தேசாய், காங்கிரஸ் தலைவர்கள் அன்று முதல் இன்று வரை பாடிவரும் பல்லவியான 'தொழிலாளர்களே, வேலைநிறுத்தம் செய்யாதீர்; அதனால் விபரீதம் விளையும்,' என்பதையே திரும்பிக் கூறிவிட்டார்.

ஆனால், நேரு சர்க்கார், புதிதாக, நீதிபதி ராஜ்யதிக்ஷகரைக் கொண்ட, ஒரு உறுப்பினர் விசாரணைக் குழுவை நியமித்து, பாங்கித் தீர்ப்பு பற்றிய விவரங்களைப் புனராலோசனை நடத்த ஏற்பாடு செய்திருக்கின்றனர்.

புதிதாக நியமிக்கப்பட்ட விசாரணைக் குழுவினால் பாங்கி ஊழியர்களுக்கு ஏற்படப் போகும் நன்மைகள் என்ன என்பதை நேரு சர்க்கார் தெளிவாகக் குறிப்பிடவில்லை; அல்லது, பாங்கி ஊழியர்களின் கோரிக்கைகளை சாதகமாக, அனுதாபத்துடன் கவனிக்கிறோம் என்ற உறுதிமொழியும் அவர்களுக்கு அளிக்கப்படவில்லை.

இந்திய சர்க்காரின் நிச்சயமற்ற போக்கினைக் கண்டு பாங்கி ஊழியர்கள் தங்கள் எதிர்ப்பைக் காட்டவும், தங்கள் கோரிக்கை உண்மையில் பாங்கி ஊழியர்களிடையே வலிவுடையது என்றும் எடுத்துக்காட்ட ஒரு நாள் அடையாள வேலைநிறுத்தம் செய்துள்ளார்கள்.

இதுபோன்ற விரும்பத்தகாத நிலை நாட்டின் முக்கிய தொழில் ஒன்றில் நிலவுவது வரவேற்கத்தக்கதல்ல. இந்த நிலைக்குக் காரணம், இந்திய சர்க்காரின், இருதரப்பினரையும் திருப்திபடுத்த வேண்டுமென்ற நினைப்புதான்.

முதலாளிகளையும் பாதுகாக்க வேண்டுமென்கிறார் தேஷ்முக்; தனது வேண்டுகோளின்மூலம், பாங்கி ஊழியர்கள் குறைபாடுகள் தீர்ந்து போகுமென்கிறார் நேரு.

முதலாளியின் இலாபம் குறையக்கூடாது; தொழிலாளியின் குரலும் ஓங்கக்கூடாது — என்பதுதான், நேரு சர்க்காரின் பொருளாதாரத் திட்டம். இரு சாராரின் மனமும் மகிழ வேண்டுமென்று நம்புகிறார்கள் டில்லி ஆட்சியினர்.

தனது உருக்கமான வேண்டுகோள், 'வருமானம் குறைகிறதே; கிடைத்து வந்த வருவாயிற்கும் ஆபத்து வருகிறதே,' என்று ஏங்கி நிற்கும் பாங்கி ஊழியர்களின் உள்ளத்தில் அமைதியை உண்டுபண்ணும்,' என்று நம்புகிறார், பண்டித நேரு.

பாங்கி ஊழியர்கள் அவசரப்பட்டு சர்க்காரின் முடிவை எதிர்க்கிறார்கள் என்று சொல்ல முடியாது; அல்லது, கோஷங்களைக் கண்டு மயங்கி, உடனே வேலை நிறுத்தத்தில் இறங்கிவிடுபவர்களுமல்ல, அவர்கள்!

பாங்கி ஊழியர்கள் பண்பட்ட மனம் உடையவர்கள்; பொறுமை, நிதானம், கடமை உணர்ச்சி, நேர்மை, சிறிய நோக்கம் இவைகள் மட்டுமே காணப்படவேண்டிய உழைக்கும் வகுப்பைச் சேர்ந்தவர்கள்; பிரச்சினைகளைச் சிந்தித்து, சீர்தூக்கிப் பார்த்து, ஒரு குறிப்பிட்ட முடிவெடுக்கும் பழக்கமுடையவர்கள்; தொழிலாளர் வர்க்கத்தினர் என்றாலும், அவர்கள், சமுதாயத்திலே மத்திய தர வகுப்பினைச் சேர்ந்தவர்கள்; அவர்கள் கோரிக்கை அனைத்தும் அர்த்தமற்றது— வீணானது என்று மத்திய சர்க்கார் கூறிவிட முடியாது.

ஆகவே, இப்போது நியமிக்கப்பட்டிருக்கும் விசாரணைக் குழுவின் தீர்ப்பு பாங்கி ஊழியர் பிரச்சினைக்கு கடைசி தீர்ப்பாக இருக்குமென்று எதிர்பார்க்கிறோம்,

நேரு சர்க்கார், தனது முதலாளித்துவ ஆதரவு மனப்பான்மைக்கு ஒரு முடிவுகட்டினால்தான் நாட்டிலே இதுபோன்ற தொழிலாளர் பிரச்சினைகள் தோன்றாமல் இருக்க முடியும்.

'தொழில் கொள்கையிலே இந்திய மந்திரி சபையின் ஒருமைப்பாடு காணவில்லை,' என்று கிரி அவர்கள் கூறியது கேட்டு, காங்கிரஸ் தலைவர்கள் தலை கவிழ்ந்திருக்க வேண்டும்.

ஜனநாயகம் என்று சொல்லப்படுகிற ஆட்சியின் தலைமைப்பீடம் பற்றி கிடைக்கக் கூடாத மதிப்புரை நேருவின் சர்க்காருக்குக் கிடைத்திருக்கிறது.

ஆகவே, பண்டித நேரு, தனது மந்திரிசபையின் கூட்டுப் பொறுப்புடைய ஒரே கொள்கையை அமுல் செய்ய முயற்சிக்கட்டும்; அதன் பின்னர் பாங்கி ஊழியர்களுக்கு அறிவுரை கூறலாம்; அந்த அறிவுரை பயனுள்ளதாகவும் இருக்கும்.

'உன்னையே நீ எண்ணிப் பாரு......' என்று பாடுவார்கள்; பண்டிதர், தனது மந்திரி சபையிலே நிலவும் கருத்து வேற்றுமையைப் போக்கி, அதன் பின்னர் பாங்கி ஊழியர்களின் குறைகளைப் போக்க முயல்வாராக!

கொத்தலாவலை குழு டில்லி செல்ல முடிவு

இலங்கை சர்க்கார் அதிகாரபூர்வமாக அறிவித்துள்ள திட்டப்படி, இலங்கைப் பிரதமர் கொத்தலாவலை, நேருவைச் சந்தித்து, இலங்கை இந்தியர் பிரச்சினை பற்றிப் பேச்சு வார்த்தை நடத்த, அக்டோபர் 8-ம் தேதி டில்லி வருவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது

அக்டோபர் 9, 10 ஆகிய இரு நாட்களிலும் பேச்சு வார்த்தைகள் நடக்குமெனவும், 11-ம் தேதி அவர் இலங்கை திரும்புவார் என்றும் தெரிகிறது.

இலங்கைப் பிரதமருடன், இலங்கை முன்னாள் பிரதமர் டட்லி சேனநாயக, சட்ட மந்திரி விக்கிரம நாயக, பிரபல வக்கீலான ஹேச். வி. பெரேரா, இந்தியப் பிரதிநிதிகள் சபையின் உறுப்பினரான என். வைத்தியலிங்கம், டிகுசா, பீ. நடேசன் ஆகியோரும் டில்லிக்கு வரலாமெனத் தெரிகிறது. இலங்கை எதிர்க்கட்சித் தலைவர் பண்டாரநாயகாவும் அழைக்கப்படலாமென்றும் செய்திகள் கூறுகின்றன.

சீனுவுக்கு ஆந்திர புகையிலை

கானுன், செப். 24—

40 லட்சம் ராத்தல் ஆந்திர ரகத்தைச் சேர்ந்த குண்டூர் புகையிலையை, சீனு வாங்கப் போவதாகத் தகவல் கிடைத்துள்ளது.

மைசூர் சர்க்கார் பஸ்களில் 36 சத விகிதம் இலாபம் கிடைத்தது

ஊழியர்களுக்கு ஒரு மாத போனஸ்!

முதல் அமைச்சர் அனுமந்தய்யா அறிவிப்பு

மைசூர் முதல் அமைச்சர் அனுமந்தையா மைசூர் சர்க்கார் பஸ் போக்குவரத்தின் ஆறாவது ஆண்டு விழாவிற்குத் தலைமை வகித்துப் பேசுகையில், ஊழியர்களுக்கு 1953-54ம் ஆண்டிற்கு ஒரு மாத போனஸ் வழங்க சர்க்கார் தீர்மானித்திருப்பதாகக் கூறினார்.

1953—54ல், 36 சத விகிதம் இலாபம் கிடைத்திருக்கிறதென்றும் சென்ற ஆண்டிலும், அதற்கு முந்திய ஆண்டிலும், ஒரு சதவிகித இலாபமே கிடைத்தது என்றும், பிரயாணிகளுக்கு மேலும் பல சவுகரியங்களைச் செய்து கொடுக்க இந்த இலாபம் பயன்படுத்தப்படுமென்றும், ஊழியர்களின் நன்மைக்காக அடுத்த ஆண்டு முதல் பிராவிடெண்ட் நிதி ஆரம்பிக்கப்படுமென்றும், முதல் அமைச்சர் கூறினார்.

மைசூர் ராஜ்யம் முழுமையும் மாணவர்களுக்கு இனி பாதிக் கட்டணம்தான் வசூலிக்கப்படுமென்று தெரிகிறது.

பாகிஸ்தான்

இஸ்லாமியக் குடியரசாகிறது

"பாகிஸ்தான், வருகிற ஜன 21-ந் தேதியன்று 'இஸ்லாமிய பாகிஸ்தான் குடியரசு' என்று பிரகடனப் படுத்தப்படும்" என்று பிரதமர் முகம்மதுஅலி தெரிவித்தார்.

அடிப்படைக் கொள்கைக் குழுவின் அறிக்கை அரசியல் நிர்ணய சபையால் ஏற்றுக்கொள்ளப்பட்டு விட்டதாகவும், அரசியல் சட்டங்கள், முதலாவதாக டிசம்பர் 25-ல் நிறைவேற்றப்படுமென்றும் அவர் தெரிவித்தார்.

'இஸ்லாமியக் குடியரசு' என பாகிஸ்தானுக்கு பெயர் சூட்டப்படுவதையும், இரண்டாவதாக, 'முஸ்லிம் அல்லாதவர் மத்திய அரசாங்கத் தலைவராக வர முடியாது,' என்ற பிரிவையும், காங்கிரஸ் உறுப்பினர்கள் எதிர்த்ததாகத் தெரிகிறது.

சைப்ரஸ் பிரச்சினை

ஐ. நா.-வுக்கு விவாதிக்க அதிகாரமில்லையாம்!

பிரிட்டிஷ் தூதவர் கூற்று!

"ஐ. நா. சபை, சைப்ரஸ் பிரச்சினையை விவாதிப்பது, விரும்பத்தக்கதல்ல,"

என்று, பிரிட்டனின் ஐ. நா. தூதுக்குழுத் தலைவர் செல்வின் லாயிட் தெரிவித்திருக்கிறார்.

ஐ. நா. சபைக்கு சைப்ரஸ் பிரச்சினையை விவாதிக்கும் உரிமை கிடையாது; அப்படி விவாதிப்பது, நண்பர்களிடையேயும், தோழர்களிடையேயும் பிளவை உண்டாக்கும் என்றும் அவர் கூறியிருப்பதாகத் தெரிகிறது.

"சைப்ரஸ், கிரீக் நாட்டைச் சேர்ந்ததேயன்றி, பிரிட்டனுடையதல்ல; எனவே, இந்தப் பிரச்சினையை ஐ. நா. விவாதிக்க வேண்டும்" என்று கிரீக் நாட்டுப் பிரதிநிதி ஐ. நா. வைக் கேட்டுள்ளதாகத் தெரிகிறது.

இலங்கையில் தேயிலை ஏற்றுமதி வரி உயருகிறது

கொழும்பு, செப். 23—

இலங்கை அரசாங்கம் இன்று முதல் தேயிலை மீது விதிக்கப்படும் ஏற்றுமதி வரியை பவுண்டு ஒன்றுக்கு 15 செண்டுகள் அதிகப்படுத்துவதென்று முடிவு செய்துள்ளது. ஏற்கனவே ஒரு பவுண்டு தேயிலைக்கு 60 செண்டாக இருந்த ஏற்றுமதி வரி 75 செண்டாக உயருகிறது.

இந்தோனேஷியா—டச்சு பிரச்னைகள்

ஐ.நா. சபை விவாதிக்கும்

இந்தோனேஷியா—ஹாலந்து தகராறை ஐ. நா. சபையில் விவாதத்திற்கெடுத்துக் கொள்ள ஐ. நா. நடைமுறைக் குழு சிபாரிசு செய்துள்ளது.

லாவோஸ், கம்போடியாவை, ஐ. நா. வில் சேர்க்கும் பிரச்சினையைப் பரிசீலிக்க வேண்டுமென்று சோவியத் நாட்டின் எதிர்ப்புக்களிடையே, இந்தக் குழு முடிவு செய்துள்ளது.

ஜினிவா ஒப்பந்தப்படி பிரச்சினைகள் தீரும்வரையில் இதை ஒத்திப்போடும்படி ரஷ்யப் பிரதிநிதி கோரியிருக்கிறார் என்றும் தெரிகிறது.

☆

இந்தோனேஷியக் குடியரசு

1 இந்தோனேஷியா, 1945, ஆகஸ்ட் 17-ந் தேதியன்று தனது சுதந்திரத்தைப் பிரகடனம் செய்தது.

2 சுயாதிபத்திய இந்தோனேஷியக் குடியரசில், ஜாவா, சுமத்ரா, காலிமான்டான், சலைபேஸி ஆகிய நான்கு பெரிய தீவுகளும், 15 சிறிய தீவுகளும், மற்றும் ஆயிரக்கணக்கான குட்டித் தீவுகளும் அடங்கியுள்ளன.

3. இந்தோனேஷியாவின் பிரதான தொழில்கள் விவசாயமும், சுரங்கத் தொழிலுமாகும். ரப்பர், பெட்ரோலியம், தகரம், கொப்பரை, புகையிலை, நிலக்கரி முதலியவை இந்தோனேஷியாவின் பிரதான ஏற்றுமதிப் பொருள்களாகும்.

4 இந்தோனேஷியக் குடியரசின் மக்கள் தொகை 8 கோடி; நிலப்பரப்பு 7,35,267 9 சதுர மைல்.

5. 1953-ம் ஆண்டின் இந்தோனேஷிய சர்க்காரின் மொத்தச் செலவுத் தொகை 1,321 6 கோடி ரூபாய்.

6 1953-ம் ஆண்டின் நிகர வருமானம் 758 கோடி ரூபாய்; நிகரச் செலவு 937 4 கோடி ரூபாய்.

காஷ்மீர் எல்லையில் தாக்குதல்கள்

50 தடவை நடைபெற்றதாம்

புதுடில்லி, செப். 24—

வெளிநாட்டு உதவி அமைச்சர் அ. கே. சந்தா, இந்திய மேல் சபையில் கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையில், 1954ம் ஆண்டு ஜனவரியிலிருந்து ஜூலை மாதம் வரையில் ஜம்மு, காஷ்மீர் எல்லையில் 50 தடவைகள் தாக்குதல்கள் நடைபெற்றிருக்கின்றன என்றும், அவைகளில் 46 எல்லைப் போர் தாக்குதல்கள், நான்கு போர் நிறுத்த எல்லைக்கோடு மீறப்பட்டதாகுமென்றும், எல்லைப் பகுதிகளில் நடந்த தாக்குதல்களில் அனேகமாக காஷ்மீர்—பாகிஸ்தான் எல்லையில் நடந்தனவென்றும், போர் நிறுத்த எல்லைக்கோடு சில தடவைகளில் மீறப்பட்டுள்ளது என்றும் கூறினார்.

பர்மிய பள்ளிகளில் மீண்டும் மத போதனை

பிரதமர் யூ-நூ விலகமாட்டார்

பர்மிய அரசாங்கம், பள்ளிக்கூடங்களில் மத போதனை அளிப்பதற்கு மீண்டும் அனுமதி அளிக்க முடிவு செய்திருப்பதாக நம்பகமாகத் தெரிகிறது.

புத்த மதத்தைச் சேர்ந்த குழந்தைகளுக்கு புத்த மதக் கொள்கைகள் போதிக்கப்பட வேண்டுமென்று சர்க்காரால் நியமிக்கப்பட்ட 'புத்த சாசனக் கவுன்சில்' என்ற விசாரணைக் குழுவின் முடிவுப்படியே இந்த புதிய உத்தரவு வெளியாகலாம் என்றும் சொல்லப்படுகிறது.

புத்த மதத்தைச் சேராத மாணவர்களுக்கு அவரவர்கள் மதக்கோட்பாடுகளைப் போதிப்பது பற்றி ஆராய புதியதொரு விசாரணைக் குழுவும் நியமிக்கப்பட்டுள்ளதாம்.

சென்ற வாரம் இந்த மத போதனை விஷயமாக தான் ராஜிநாமாச் செய்துவிடக்கூடும் என்று பிரதமர் யூ-நூ பயமுறுத்துகிற அளவு பிரச்சினை வளர்ந்திருந்தது; ஆனால் மந்திரி சபை, மீண்டும் மதபோதனையை அனுமதிப்பது என்ற முடிவுக்கு வந்திருப்பதால் இந்த நெருக்கடி தீர்ந்துவிட்டதென்று நம்பப்படுகிறது.

பள்ளிகளில் மதபோதனை கூடாது என்ற உத்தரவை நீக்கி, மீண்டும் மதபோதனை அனுமதிக்கப்பட வேண்டும் என்ற விஷயத்தில் பிரதமரைச் சந்தித்த எல்லா மதத் தலைவர்களும் ஒரே கருத்தை உடையவர்களாயிருந்தனர் எனத் தெரிகிறது.

பின்வந்த செய்திகள் 'பர்மியப் பிரதமர் இந்த மத போதனைப் பிரச்னையில் எழுந்துள்ள கருத்து வேற்றுமைகள் சீக்கிரமே களையப்படுமென்றும், இதற்காக தான் ராஜிநாமாச் செய்யப் போவதில்லை என்றும் குறிப்பிட்டதாகக் கூறுகின்றன.

முன்பு, தான் ராஜிநாமாச் செய்யப் போவதாகக் குறிப்பிட்டது, தனது சகாக்களான இளைஞர்களுக்கு முதன்மந்திரியாயிருக்கும் சந்தர்ப்பமளிக்கும் நோக்கத்திலேயே யன்றி, வேறு எதற்காகவும் இல்லை என்றும் பிரதமர் யூ—நூ குறிப்பிட்டதாகத் தகவல் வெளிவந்துள்ளது.

இலங்கையில் அமெரிக்க வானொலி நிலையம்

'அமெரிக்காவின் குரல்' என்ற அமெரிக்க அரசாங்க வானொலி நிலையத்தின் கிளை நிலையமொன்றை இலங்கையில் நிர்மாணித்துக் கொள்வதற்கான உரிமையை அமெரிக்க அரசாங்கம் இலங்கை அரசாங்கத்திடம் செய்துள்ள ஒப்பந்தத்தின் மூலம் பெற்றுவிட்டது.

ஒப்பந்த நகல் ஒன்றை கடந்த இரவு இலங்கையின் பிரதிநிதித்துவ சபையின் விளம்பர அமைச்சர் எஸ். நடேசன் பார்வைக்கு வைத்தார்.

அமெரிக்க விளம்பரத் துறையினர் தேவையான நிலப்பரப்பை விரும்பிய இடத்தில் தேர்ந்தெடுத்து இந்த வானொலி நிலையத்தை சொந்தச் செலவில் அமைத்துக் கொள்ளலாம்.

இதற்கு ஏறக்குறைய 125 ஏக்கர் நிலம் தேவை. அதை குத்தகைக்கோ, விலைக்கோ இலங்கை அரசாங்கத்தின் மூலம் அமெரிக்கா பெறவேண்டும்.

ஒப்பந்தக் காலத் தவணை முடிந்ததும், அமெரிக்கக் கிளை நிலயத்தைச்சேர்ந்த எல்லா சாமான்களையும் அமெரிக்காவே திருப்பி எடுத்துக் கொள்ளலாம். அவைகளுக்கு இலங்கை அரசாங்கம் ஏற்றுமதி வரி விதிக்கக் கூடாது.

தவணை காலம் முடிந்ததும் வானொலி நிலைய நிலப்பரப்பையும், கட்டடங்களையும், இரு தரப்பினருடைய சம்மதத்தின் மீது ஒரு விலையைக் கொடுத்து, இலங்கை அரசாங்கம் எடுத்துக் கொள்ள உரிமை உண்டு.

முதல் 10 ஆண்டு தவணையிலேயே ஒரு ஆண்டு அறிவிப்பின் மீது இந்த ஒப்பந்தத்தை அமெரிக்கா ரத்து செய்துகொள்ளலாம்.

வியப்படையவில்லையாம்!

இலங்கை இந்தியர் குடிஉரிமை பற்றிய இந்திய — இலங்கை உடன்படிக்கை, மனநிறைவு அளிக்கும் வகையில் செயலாற்றப் படவில்லை என்று இலங்கைப் பிரதமர் கொத்தலாவலை அறிவித்திருப்பதாகக் கூறப்படுவதுபற்றி டில்லியில் எத்தவிதமான வியப்பும் ஏற்படவில்லை என்று தெரிகிறது.

சுதந்திரம் பெற்ற இலங்கையில் இந்தியர்கள் பிரச்சினை ஒரு கட்சிப் பிரச்சினையாக மாறிவிட்டது. அதோடு, எதிர்க் கட்சியைக் கண்டு எப்போதும் பலவீனமான அரசாங்கம் அஞ்சும் கொத்தலாவலையின் சொந்த இன்னல்களை டில்லி உணர்ந்தது அங்கே, சரியான பரிகாரம் காணுவதற்கு இடையூறாக இந்த இன்னல்கள் வரக்கூடாது என்று கருதப்படுகிறது.

"சியாங் ஒழிய வேண்டும்!"

அட்லி கருத்து

ரஷியா, சீனா ஆகிய நாடுகளுக்குச் சென்றுவிட்டு இங்கிலாந்திற்குத் திரும்பியுள்ள, தொழிற் கட்சித் தலைவரான அட்லியை, பார்மோசா நிலைமைப் பற்றிக் கேட்கப்பட்டபோது, குறிப்பிட்டதாவது:—

"இன்று பார்மோசாப் பிரச்சினைதான் மிகக் கடினமான ஒன்றாக உள்ளது. தனிப்பட்ட முறையில் எனது அபிப்பிராயத்தைச் சொல்ல வேண்டுமானால், எவ்வளவு சீக்கிரம் சியாங்-கே-ஷேக்கை கைகழுவுகிறோமோ அவ்வளவுக்கவ்வளவு நல்லது என்றே எண்ணுகிறேன்."

"ஜினீவா மாநாட்டிற்குப் பிறகு நெருக்கடி நிலைகள் சற்று குறைந்துள்ளன. எங்களது சீன விஜயம் இந்த நிலைகள் வளருவதற்கு ஒரு அளவு உதவியுள்ளதென்றே எண்ணுகிறேன்," என்றும் அட்லி குறிப்பிட்டிருக்கிறார்.

"செஞ்சீனா ஐ. நா.-வில் அங்கம் பெற அனுமதி மறுக்கப்படுவதற்குக் காரணம், அது ஆக்கிரமிப்பு செய்துள்ளது என்பதால் அல்ல; ஆனால், செஞ்சீனா கம்யூனிசக் கொள்கையை உடையதாயிருக்கிறது என்பதினால்தான்!

நான் கம்யூனிசத்தை அடியோடு வெறுக்கிறேன்; ஆனால், சீனா கம்யூனிஸக் கொள்கையைப் பின்பற்றுகிறதென்றால், அது சீன மக்களைப் பொறுத்த விஷயம்; நாம் அவர்களுக்குக் கட்டளையிட முடியாது; அதேபோல அவர்களும் நமக்குக் கட்டளை இட முடியாது," என்று ஒலிபரப்பின் மூலம் வெளியிடப்பட்டுள்ள செய்தியில் அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஜப்பானிய மீனவர் பலி!

அமெரிக்கா நடத்திய நீர்வளிக் குண்டு சோதனையின் எதிரொலி!

ஜப்பானிய மீன் பிடிப்பவர்களில் 23 பேர்கள் கடந்த மார்ச் மாதத்தில் அமெரிக்கா பசிபிக் கடலில் நடத்திய நீர்வளிக் குண்டு பரிசோதனையின் விளைவாக பாதிக்கப்பட்டிருந்தனர் அல்லவா? அவர்களில் ஆய்ச்சி குபோயாமா என்ற 39 வயதுடைய மீனவர் மருத்துவ மனையில் இறந்துவிட்டதாகத் தகவல் வெளிவந்துள்ளது.

பாதிக்கப்பட்டவர்கள் எல்லோருமே மருத்துவ மனையில் சிகிச்சைக்காகவும் பரிசோதனைக்காகவும் வைக்கப்பட்டுள்ளனர். நீர்வளிக்குண்டு பரிசோதனைக்கு குபோயாமா முதல் பலியாகியிருக்கிறார்.

நேரிடையாகவும், வேறு பல வழிகளிலும் ஜப்பானிய மீன் பிடிக்கும் தொழில் இந்த அமெரிக்கப் பரிசோதனையினால் பாதிக்கப்பட்டிருப்பதாகவும் அதற்காக வேண்டி 25 இலட்சம் பவுன் நஷ்டஈடு தருமாறு அமெரிக்காவை ஜப்பான் கேட்டுள்ளதாகத் தெரிகிறது.

இந்தச் சம்பவம் ஜப்பான் நாட்டு மக்களுக்கு அமெரிக்கா மீது ஒருவகை வெறுப்புணர்வைத் தூண்டியுள்ளதாம்.

பாகிஸ்தான் இராணுவ அதிகாரி மீது வழக்கு

இராக் மன்னர், பாகிஸ்தான் கவர்னர் - ஜெனரல், பாகிஸ்தான் மந்திரி சபையினர் ஆகியோரைக் கொலை செய்ய முயற்சித்ததாக மூன்று இராணுவ அதிகாரி ஒருவரும் வியாபாரியும், கராச்சி மாஜிஸ்திரேட் கோர்ட்டில் குற்றம் சாட்டப்பட்டுள்ளனர்.

சென்ற மார்ச் மாதம் 12-ந் தேதியன்று, கராச்சியில் நடைபெற்ற வரவேற்பில் கலந்துகொண்ட இராக் மன்னரைத் துப்பாக்கியால் சுட்டுக் கொல்ல அவர்கள் திட்டமிட்டிருந்தார்களாம்.

இந்தக் குற்றச் சாட்டில், பாகிஸ்தான் சர்க்காரை வீழ்த்துவதே இவர்களின் நோக்கம் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது.

சென்னை மதுவிலக்குச் சட்டம் திருத்தப்படும்

சென்னை மதுவிலக்குச் சட்டத்தை யொட்டி ஏற்படுத்தப்பட்டுள்ள விதிகளில், சில திருத்தங்களை சர்க்கார் பிரசுரித்திருக்கின்றனர்.

மதுவிலக்குக் கமிஷனரால் அங்கீகரிக்கப்பட்டு, அவ்வப்போது கெஜட்டில் பிரசுரமாகும் தப்பட்டும் சரக்குகளையே உரிமையாளர்கள் தயாரிக்கவேண்டும். அவ்விதம் தயாரிக்கப்பட்ட திராவகத்தில் சிறிதளவு எடுத்து, வட்ட சப்-இன்ஸ்பெக்டர் மூலம் மதுவிலக்கு கமிஷனரின் ஆராய்ச்சிக் கூடத்துக்கு அனுப்பவேண்டும்; அவசியம் சேர்த்துகொள்ளலாம், உரிமையாளரிடமிருந்து மாதிரி திராவகம்வாங்கி பரிசோதனை செய்ய கமிஷனருக்கு அதிகாரம் உண்டு; குறிப்பிட்ட நிபந்தனைகளுக்குப் புறம்பாக, திராவகம் தயாரிக்கப்பட்டுள்ளது என்று அவர் கண்டால், உரிமையாளரின் அனுமதியை எச்சமயத்திலும் ரத்து செய்யலாம் என்பவைகளே அந்த விதிகளில் சேர்க்கப்பட்டுள்ளதிருத்தங்கள்.

நிலக்கடலை சாகுபடி

நடப்பு ஆண்டிற்கான அகில இந்திய முதல் மதிப்பீட்டின்படி நிலக்கடலை சாகுபடி விஸ்தீரணம் 82,42,000 ஏக்கராக இருக்குமென்று தெரிகிறது.

மாட்டுக்குப் பதில் இயந்திரம்

டோர்கிங் (சர்ரே), செப். 24—

கிராமியர்கள் ஒட்டக்கூடிய இயந்திரம் ஒன்று இங்கு வேலை செய்து காட்டப்பட்டது. இது மாதிரி போன்ற இயந்திரங்களை, இந்தியாவிலுள்ள ஆயிரக்கணக்கான கிராமங்களில் வேலைக்காக உபயோகப்படுத்தப்படும் எருதுகளுக்குப் பதிலாகப் பயன்படுத்தலாம்.

பெட்ரோல், மின்சாரம் போன்ற வசதிகள் இல்லாத இடங்களிலும், வளர்ச்சியடையாத நாடுகளிலும் பயன்படுத்த வேண்டும் என்ற நோக்கத்தோடு எஸ். ஆர். ஹமி கிச்சாட்டோ என்பவர் இவ்வியந்திரத்தைக் கண்டுபிடித்திருக்கிறார்.

நீர் இறைக்கவும், வைக்கோல் வெட்டவும், தானியங்களை அரைக்கவும், மரங்களை அறுக்கவும் போன்ற தொழில்களை இந்த இயந்திரங்கள் மூலம் செய்யலாம்.

மட்டாக நிலக்கரி, பழுப்பு நிலக்கரி ஆகியவற்றால் இவைகள் இயக்கப்படலாம்; மேலும் இடம் விட்டு இடம் மாற்றவும் இவைகள் வசதியாக அமைக்கப்பட்டுள்ளனவாம்.

திராவிட நாடு பிரிவினை விளக்க மாநாடு

திருத்துறைப்பூண்டிவட்ட தி. மு. க. முடிவு

19—9—54 மாலை 5 மணிக்கு திருத்துறைப்பூண்டி வட்ட தி மு க மூன்றாவது கூட்டம் கழக அலுவலகத்தில் தோழர் பி. தருமலிங்கம் தலைமையில் நடைபெற்றது. அதுசமயம் ஜில்லா போர்டு தேர்தலில் திருத்துறைப்பூண்டி நாச்சிகுளம் தொகுதி ஆலத்தம்பாடி தலைஞாயிறு தொகுதிகளில் கழகத் தோழர்கள் யாரையும் ஆதரிப்பதில்லை என்றும், வேதாரணியம் தொகுதியில் மட்டும் சுயேச்சை அபேட்சகர் குப்பா தேவரை கழகத் தோழர்கள் ஆதரிப்பது என்றும் தீர்மானிக்கப்பட்டது.

வட்டக் குழுவின் சார்பில் திருத்துறைப்பூண்டியில் அக்டோபர் 31-ந் தேதி ஞாயிறன்று "திராவிட நாடு பிரிவினை விளக்க மாநாடு" என்று ஒரு நாளைய மாநாடு நடத்துவதென்றும், மாநாட்டிற்கு தலைவராக சம்பத் அவர்களையும், திறப்பாளராக புரட்சி நடிகர் எம். ஜி. ராமச்சந்திரன் அவர்களையும், மற்றும் பொதுச் செயலாளர் அண்ணாதுரை, கழக முன்னணி வீரர்களையும் சொற்பொழிவாற்ற அழைப்பதென்றும் தீர்மானிக்கப்பட்டது.

மாநாட்டிற்கு வரவேற்புக்குழு வினர்களாக வட்டத்திலுள்ள எல்லா கிளை செயலாளர்களையும், மற்றும் கழக முக்கியஸ்தர்களையும் தேர்ந்தெடுத்ததுடன், மாநாட்டு வரவேற்புக் குழு தலைவராகவை. சுப்பிரமணியம் அவர்களையும், செயலாளர்களாக தோழர்கள் நெடும்பலம் டி. எஸ். கல்யாணசுந்தரம், முத்துப்பேட்டை க. தருமலிங்கம் ஆகியோரையும், பொருளாளராக இடையூர் சிங்காரம். கலைமதி அவர்களையும், தொண்டர் படைத் தலைவர்களாக தலைஞாயிறு செந்துட்டுவன், திருத்துறைப்பூண்டி கு. ஷேக் உசேன் அவர்களையும், மற்றும் விளம்பரக் குழு—நிர்வாக அலுவல்குழு—நாடகம் பொறுப்பாளர்—அலங்காரம் பொறுப்பாளர் ஆகியோர்களைத் தேர்ந்தெடுக்கப்பட்டது.

அன்று இரவு 7 மணிக்கு இடையூரில் வட்டக் குழுக் கூட்டம் நிறுத்தப்பட்டு, திருத்துறைப்பூண்டி தெற்கு வீதியில் திராவிட நாடு பிரிவினை நாள் கூட்டம் தோழர் டி. எஸ். கல்யாணசுந்தரம் தலைமையில் நடைபெற்றது. தோழர் க. தருமலிங்கம்

திருமணங்கள்

திருவிழந்தூர், செப். 16—

15—9—54 காலை 9 மணிக்கு தோழர் கே. கிருஷ்ணமூர்த்தி தலைமையில் தோழர் கே எஸ். சண்முகம்-தோழியர் அலர்மேலு அம்மையார் திருத்திருமணம் நடைபெற்றபோது மணமக்களைப் பாராட்டி தோழர்கள் க. பழனிச்சாமி, கே. சந்திராசு, கே. எஸ். சவுந்தரராசன், என். பெட்டப்பா ஆகியோர் பேசினர். நகர தி. மு. கழகச் சார்பிலும், நண்பர்கள் சார்பிலும் மணமக்களுக்கு வாழ்த்துக்களும், பரிசுகளும் வழங்கப்பட்டன. இத்திருமணத்தின் நினைவாக 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ. 2 நன்கொடையளிக்கப்பட்டது—வரப்பெற்றோம்—நன்றியுடையது—பொறுப்பாளர்.

* * *

16—9—54ல் கள்ளக்குறிச்சி தாலுகா ஆலத்தூர் கிராமத்தில் தோழர் கருப்பன் தலைமையில் தோழர் வேலன்-தோழியர் வெள்ளையம்மாள் சீர்திருத்தத் திருமணம் நடைபெற்றது. தோழர்கள் சடையன், எச். ஏ. பசீர், க. வெ. நெடுமாறன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். மணமக்கள் சார்பாக 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ 1 அன்பளிப்பு அளிக்கப்பட்டது—வரப்பெற்றோம்—நன்றியுடையது—பொறுப்பாளர்.

* * *

காவலாபுரம் தோழர் இரா. கேசவன்—தோழியர் குப்பம்மாள் அவர்கள் திருமணத்தின் நினைவாக 'நம் நாடு' வளர்ச்சிக்காக ரூ 1 அன்பளிப்பு அளிக்கப்பட்டது — வரப்பெற்றோம்—நன்றியுடையது — பொறுப்பாளர்.

* * *

16—9—54 மாலை 5-மணியளவில் முத்துப்பேட்டையில் தோழர் க. சுப்பையன்—மங்களம் திருமணம் திருந்திய முறையில் தாலியில்லாமல் 'எம். எம்.' என்ற எழுத்துக்களும் பொறித்த பதக்கம் ஒன்றை அணிவித்ததுடன் நடைபெற்றது. நிகழ்ச்சிகளுக்கு தோழர் க. தருமலிங்கம் தலைமை வகித்தார். தோழர்கள் கே. பி. மருதையன், பி. கணேசன், இரா. நடராசன் ஆகியோர் பேசினர். மணமக்களுக்கு ஏராளமான புத்தகங்கள், வாழ்த்து மடல்கள் அன்பளிப்பாகக் கொடுக்கப்பட்டது. இத்திருமணத்தின் நினைவாக 'நம் நாடு' நிதிக்கு வளர்ச்சிக்கு ரூ. 1 அன்பளிப்பளிக்கப்பட்டது—வரப்பெற்றோம்—நன்றியுடையது—பொறுப்பாளர்.

* * *

16—9—54 காலை 5 மணிக்கு கவுந்தப்பாடி கன்னியம்மை மண்டபத்தில் தோழர் நாராயணன்-தோழியர் வள்ளியம்மை திருமணம் தி. மு. கழக தோழர்களின் ஆதரவில் செலவேதுமின்றி நடைபெற்றது.

* * *

16—9—54 காலை 7 மணிக்கு தோழர் கோவிந்தசாமி—தோழியர் முனியம்மாள் வாழ்க்கை ஒப்பந்தம் திருவண்ணாமலை பெரிய தெரு, 59 செ. இல்லத்தில் ஆ. உ. பன்முகம் தலைமையில் நடைபெற்றது.

22 பேர் பலி

பெட்ரோல் டாங்கி வெடித்ததின் விளைவு

அட்லாண்டிக் ஒப்பந்த விமான தளத்தில், பதினாயிரம் காலன் அளவுள்ள பெட்ரோல் டாங்கி ஒன்று வெடித்ததின் விளைவாக 22 பேர் உயிரிழந்ததாகச் சொல்லப்படுகிறது.

நம் திராவிட நாடு பிரிவினைக் காலம் நாம் ஏன் கொண்டாடுகிறோம் என்பதை விளக்கிப் பேசி சொற்பொழிவாற்றினர்,

பட்டிகளைப் பாதுகாக்கும் நிலையா மாநிலங்களுக்கு?

டில்லியில் அதிகாரத்தைக் குவிக்கும் ஆதிக்க மனப்பான்மைக்கு எதிர்ப்பு

மூன்றாவது அரசியல் சட்டத் திருத்த மசோதா: மக்கள் சபையில் எதிர்ப்புக்கிடையே நிறைவேற்றம்

புதுடில்லி, செப். 24—

இந்திய மக்கள் சபை, மூன்றாவது அரசியல் சட்டத் திருத்த மசோதாவை நிறைவேற்றியது. இதன் மூலம் பருத்தி, சணல், உணவுப் பொருள்கள் ஆகியவற்றின்மீது மத்திய சர்க்காருக்கு நிரந்தரமாக அதிகாரம் அளிக்கப்பட்டிருக்கிறது.

அரசியல் சட்டம் எழுதப்பட்டபோது, இப்பொருள்களின்மீது மத்திய சர்க்காருக்கு ஐந்தாண்டுகள்வரை அதிகாரம் அளிக்கப்பட்டது. இந்த அதிகாரம் அடுத்த ஆண்டில் முடிவடைகிறது. இப்போது நிறைவேற்றப்பட்டிருக்கும் அரசியல் சட்டத் திருத்த மசோதாவின் மூலம் இப்பொருள்களை, மாநில, மத்திய சர்க்கார்கள் இரண்டிற்குமான பொதுப் பட்டியலில் வைப்பதன் மூலம், மத்திய சர்க்காருக்கு நிரந்தரமாக இப்பொருள்களின்மீது அதிகாரம் அளிக்கப்பட்டிருக்கிறது.

இப்படி மத்திய சர்க்காரிடம் நிரந்தரமாக அதிகாரம் தரப்படுவதை, எதிர்க்கட்சி உறுப்பினர்கள் எதிர்த்தனர். இது மாநிலங்களின் அதிகாரங்களின் மீது உரிமை கொண்டாடுவதாகுமெனவும், தேவைப்பட்டால் மத்திய சர்க்கார், இன்னும் ஐந்தாண்டு காலத்திற்கு இப்பொருள்களின் மீது கட்டுப்பாடுகள் விதிக்கத் தனது அதிகார காலத்தை நீடித்துக்கொள்ளலாம் என்றும் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் வற்புறுத்தினார்கள்.

இந்த மசோதா சபையில் விவாதிக்கப்பட்டபோது, ராஜஸ்தான் ஜன சங்க இயக்க உறுப்பினரான யு. எம். திரிவேதி ஆதரித்துப் பேசுகையில், "மத்திய சர்க்கார் இப்பொருள்களின் மீது எல்லா அதிகாரங்களையும் தன்னிடம் வைத்திருக்கவில்லை என்றால் பொருளாதாரத் துறையில் சவ்விதமான நிதியையும் பெற முடியாது; இதுவரையில் மாநிலங்கள் தங்களுக்கிருந்த அதிகாரங்களைத் தவறான முறையில் பயன்படுத்திக் கொண்டிருக்கின்றன; இப்பொருள்களின் பெயர்களை, மாநில, மத்திய சர்க்கார்களுக்கான பொதுப் பட்டியலில் வைத்திருப்பதைவிட, மத்திய சர்க்காருக்கான பட்டியலில் வைத்திருக்க வேண்டுமென ஆலோசனை கூற விரும்புவதாக"ப் பேசினார்.

மேலும், அவர் தொடர்ந்து பேசுகையில், டாக்டர் ஏ. கிருஷ்ணசாமி, இனிமேல் மாநிலங்களிடம் எடுத்துப் பயன்படுத்தியலாத — அதிகாரமில்லாத பணப் பெட்டிகளும், ஆடு மாடுகளை அடைக்கும் பட்டிகளுமே மீதமிருக்கும் என்று கூறியுள்ளார்; ஆனால் இந்த மசோதாவினால் உரிமைகள் ஏதும் மீறப்பட்டதாகவோ, அல்லது ஜனநாயகத்திற்கும் புறம்பான காரியம் நடைபெற்றுவிட்டதாகவோ கூறமுடியாது" என்று கூறினார்.

பி.சோ. கட்சியினரும், மேற்கு வங்கத்தைச் சேர்ந்தவருமான திரிதிப் குமார் சௌதுரி பேசுகையில், "மாநிலங்களைப் பற்றி மட்டுமின்றி, மக்களின் உரிமைகளைப் பொறுத்தமட்டிலும், சிறிது சிறிதாக மத்திய சர்க்காரிடம் அதிகாரம் குவிக்கப்படுவதை நான் பார்த்து வருகிறேன்" என்று குறிப்பிட்டு, எதிர்த்தார்.

விவாதத்திற்குப் பதில் அளித்த மத்திய சர்க்கார் வர்த்தக அமைச்சர் "எனக்கென்று தனியாக அரசியல் எண்ணங்கள் உண்டு; மாநிலங்களிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கும் பொறுப்புகளை, அவைகளிடமிருந்து பறித்துவிட வேண்டுமென்பதில் எனக்கு நம்பிக்கை இல்லை; ஒரு முறை மாநிலங்களின் அதிகாரப் பொறுப்புகளை மத்திய சர்க்கார் எடுத்துக்கொள்ளுமானால், மத்திய சர்க்காரின் பொறுப்புகள் சமாளிக்க முடியாத அளவுக்கு அதிகமாகிவிடுகிறது," என்று குறிப்பிட்டார்.

மாநிலங்களை......

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மாநில சர்க்கார் ஏராளமான பொருட் செலவு செய்ய வேண்டியிருப்பதால், மாநிலங்களுக்கு மத்திய சர்க்கார் உதவ வேண்டியது அவசியம் என்று கருதப்படுகிறதாம்.

குழுவின் சிபாரிசுகளின் நோக்கம் எட்டு ஆண்டுகள் ஆதாரக் கல்வியும், அதன் பின்னர் மூன்று அல்லது நான்காண்டுகள் உயர்நிலைக் கல்வியும், அதன் பிறகு உயர்தரக் கல்வி பயின்று பின்னர் பட்டப்படிப்பிற்கான வழிவகைகளைச் செய்ய வேண்டுமென்பதுதான்.

மத்திய சர்க்காரின் உதவியைப் பெற 50 பள்ளிகள் பல அம்சத் திட்டப் பள்ளிகளாக மாற்றப்பட வேண்டுமாம். தேர்ந்தெடுக்கப்பட்ட இப்பள்ளிகளில் விஞ்ஞானத்தில் 200 புதுமுறைப் பாடங்களும், தொழில் கல்வியில் 200 பாடங்களும், விவசாயத் தில் 300-ம், வியாபாரத் துறைகளில் 150-ம், கலைத் துறையில் 50-ம், குடும்பக் கலை பற்றிய 100 பாடங்களும், ஆக 1,000 புது முறைப் பாடங்களுக்கு இப்பள்ளிகளில் ஏற்பாடு செய்யப்படுமென்று தெரிகிறது.

இத்துறையில் ஆரம்பத்தில் ரூ 4,19,000 செலவாகுமென்றும், பின்னர் ஆண்டுதோறும் ரூ 81,000 செலவாகுமென்றும் மதிப்பிடப்பட்டிருக்கிறது.

தேர்ந்தெடுக்கப்பட்ட பள்ளிகள் ஒவ்வொன்றுக்கும் பொது விஞ்ஞானம், சமூகப் பாடங்கள், தொழில் கல்வி இவைகளுக்கான உபகரணங்கள் செய்ய ரூ. 15,000 அளிக்கப்படுமெனவும் தெரிகிறது.

கல்விக் குழுவின் சிபாரிசுகளை அமுல் நடத்துவதில் தேவைப்படும் ஆசிரியர்களுக்கான பயிற்சியை அளிக்கவும், தொழில் கல்விக்காகத் தேவைப்படும் உபகரணங்களை வாங்கவும், ஆரம்பத்தில் ரூ 60,000-மும், பின்னர் ஆண்டுதோறும், ரூ 16,000-மும் செலவாகுமென்று மதிப்பிடப்பட்டிருக்கிறது.

இரண்டு ஆண்டுகளில் இத்திட்டத்திற்காகும் செலவு சுமார் ரூ 16 கோடி ஆகுமென்றும், இச்செலவில் மத்திய சர்க்கார் சுமார் ஒன்பதே முக்கால் கோடி ரூபாயை ஏற்றுக்கொள்ளுமென்றும் தெரிகிறது. மீதம் உள்ள

கழகக் கூட்டங்கள்

★

வாலாஜாபாத்

26—9—54 மாலை $6\frac{1}{2}$ மணிக்கு

பேசுபவர்:

முகவை ஆர். எஸ். பாண்டியன்

★

தர்மபுரி

மோட்டார் நிலைய தி. மு. கிளைக் கழக துவக்கவிழா

தீர்த்தகிரியார் சதுக்கத்தில்

27—9—54 மாலை 6 மணிக்கு

தலைவர்: பி. எம். குப்புசாமி

பேசுவோர்:

டி. வி. நாராயணசாமி

எஸ். எஸ். இராசேந்திரன்

★

கீழ் வழித்துணையாங்குப்பம்

காந்தி மைதானத்தில்

28—9—54 செவ்வாய் மாலை

தலைவர்: நா. நடராசன்

பேசுபவர்:

சி. பி. சிற்றரசு

★

பிள்ளாதுறை

(தாத்தையங்கார்பேட்டை)

பாவோடித் திடலில்

28—9—54 மாலை 7 மணிக்கு

பேசுபவர்:

எஸ். எஸ். இராசேந்திரன்

சுகாதார ஊர்வலம்

26—9—54 காலை 8 மணிக்கு தோழர் எம். ஜி. ரங்கநாதன் தலைமையில், முக்கிய வீதிகளில் சுகாதார ஊர்வலமும், சுகாதார பிரசாரமும் நடைபெறும்.

நிர்வாகப் பதவி...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கட்டளை, "பெண்கள் வகுப்பினருக்கே அல்ல இந்தக் கட்டுப்பாடுகள்; ஆனால், குறிப்பிட்ட பெண்கள், அதாவது மணமான பின் சில மாதங்களிலோ அலுவலிலிருக்கிற பெண்களுக்கு மட்டுமே தான் இந்தக் கட்டுப்பாடுகள்," என்று கூறியிருக்கிறார்.

இதுவரை பெண்கள் மணமான பிறகு இந்திய நிர்வாக இலாகாவில் தொடர்ந்து பணிபுரிய முடியாது என்ற முடிவே, ஓட்டெடுப்பின் மூலம் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது...

செலவை மாநில சர்க்கார் ஏற்கவேண்டுமென்றும் தெரிகிறது.

இத்திட்டத்தின்படி, கல்வி வசதிக்கு தேர்ந்தெடுக்கப்படும் பள்ளிகள் கீழ்க்கண்ட முறையில் தேர்ந்தெடுக்கப்படுமென்று தெரிகிறது.

(1) இப்போதுள்ள உயர்நிலைப் பள்ளிகளில் ஐந்து சதவீதம் பல அம்சப் பள்ளிகளாக மாற்றப்படும்.

(2) பதினைந்து சதவீத பள்ளிகள், சில குறிப்பிட்ட பாடங்களில் போதனை முறையை அபிவிருத்தி செய்வதற்கென்று தேர்ந்தெடுக்கப்படும்.

(3) இருபது சதவீத பள்ளிகள் நூல் நிலையங்களை அபிவிருத்தி செய்ய தேர்ந்தெடுக்கப்படும்.

(4) தற்போதுள்ள இடைத்தரப்பள்ளிகளில் பத்திலிருந்து பதினைந்து சதவீத பள்ளிகள், தொழில் கல்வி போதனைக்காகத் தேர்ந்தெடுக்கப்படும்.

இத்திட்டங்களை அமுல் நடத்த ஒப்புக்கொள்ளும், ஒவ்வொரு மாநிலமும், மத்திய சர்க்காரிடமிருந்து மூன்றில் இரண்டு பங்கு செலவு, பொருளாதார உதவி பெறும் என்று தெரிகிறது.

இத்திட்டங்களை அமுல் நடத்துவது பற்றி சென்னை சர்க்காரிடமிருந்து எந்தவிதமான பதிலும் டில்லிக்குச் செல்லவில்லை என்று தெரிகிறது.

திரு. வி. க. நினைவுப் பரிசுப் போட்டிகள்

26—9—54 மாலை 2 மணிக்கு, பெத்துநாய்க்கன்பேட்டை அம்மன் கோவில் தெருவில் உள்ள டாக்டர் குருசாமி முதலியார் டி. டி. வி. உயர்நிலைப் பள்ளியில், திரு. வி. க. அவர்கள் நினைவாக, உயர்நிலைப் பள்ளி வகுப்புகளுக்கு உரையாடல் போட்டியும், நடுநிலைமைப் பள்ளி வகுப்புகளுக்கு திரு. வி. க. பாடல் போட்டியும் நடைபெறும்.

பகுத்தறிவுக் கலை நிகழ்ச்சி

28—9—54 இரவு 7 மணிக்கு, ஸ்ரீவைகுண்டம் வ. உ. சி. திடலில், தோழர் ஏ. கே. அய்யன் தலைமையில் 'தி. மு. கழக வரலாறு' என்னும் பொருள் பற்றி தோழர்கள் டபிள்யூ. டி. துரைசாமி, வி. தேவராசன் குழுவினரால், ஸ்ரீவைகுண்டம் அழகிரி படிப்பகச் சார்பில் கலை நிகழ்ச்சி நடைபெறும்.

க. அருணாசலம் (ராமு)

தோற்றம்: 31—8—33 திருமணம்: 2—7—52

மறைவு: 28—7—54

★

எனது நன்றி

எனது அருமைச் செல்வமான அருணாசலம் என்ற ராமுவை கடந்த ஜூலை 28-ம் நாள் நான் இழந்துவிட்டபோது, நேரில் வந்தும், தந்தி, கடிதங்கள் மூலமாகவும் என்னுடன் வருந்தி ஆறுதலளித்த நண்பர்களுக்கும், தோழர்களுக்கும் என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அன்பன்,
காஞ்சி-கல்யாணசுந்தரன்

இலங்கை இந்தியத் தூதுவர் திருப்பி அழைக்கப்படுகிறார்

இந்திய சர்க்காரின் முடிவு

அடுத்த மாதம் கொழும்புவிலிருந்து புறப்படுவார்

புதுடில்லி, செப். 25—

இலங்கையில் இந்தியத் தூதுவராக இருக்கும் சி. சி. தேசாயை இந்திய சர்க்கார் திருப்பி அழைத்துக்கொள்ள முடிவு செய்திருக்கிறதாம்.

சென்ற ஆண்டு மார்ச் திங்களிலிருந்து தேசாய் இலங்கையில் தூதுவராக இருக்கிறார். நடைமுறை விதிகளின்படி தேசாய் இன்னும் ஆறு மாத காலம் பதவியிலிருக்க வேண்டியிருக்கிறது; ஆனால், இவரை இனி மேல் இலங்கையில் நீடிக்க விடுவது விரும்பத்தக்கதல்ல என்று மத்திய சர்க்கார் கருதுகிறதாம்.

தேசாய் அடுத்த மாதம் இந்தியா திரும்புவார் என்று தெரிகிறது. ஆசியாவில் மீண்டும் ஏதாவது ஒரு நாட்டின் இந்திய சர்க்காரின் பிரதிநிதியாக அவர் நியமிக்கப்படலாம் என்று தெரிகிறது.

எந்தப் பதவியை அவருக்கு அளிப்பது என்பது பற்றி இன்னும் மத்திய சர்க்கார் முடிவு செய்யவில்லையாம்.

சைக்கிள் விலை குறையலாம்!

தொழிலமைச்சர் தகவல்!

வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படும் சைக்கிள்களின் விலை சற்றுக் குறையுமென்றும், அதனால் உள்நாட்டு சைக்கிள் தொழில் எவ்வகையிலும் பாதிக்கப்படாதென்றும், மத்திய சர்க்கார் தொழிலமைச்சர் தெரிவித்துள்ளார்.

தற்போது இறக்குமதி செய்யப்படும் சைக்கிள்களின் விலை ரூ 18?-லிருந்து 190 வரையிலும் இருக்கிறது. இனிமேல், அந்த சைக்கிள்களின் விலை சுமார் ரூ 155-க்கு மேல் அதிகமாகாதென்றும் குறிப்பிட்டுள்ளார்.

நகைகளை அபகரிக்கும் கோவா சர்க்கார்

கோவாவில் உள்ள போர்ச்சுகீசிய சர்க்காரின் இராணுவச் செலவு அளவுக்கு மீறிவிட்டதென்றும், இச்செலவை ஈடுகட்டுவதற்காக நிலச்சுவான்களிடமிருந்தும், பணக்காரர்களிடமிருந்தும் கட்டாயப்படுத்தி வலோத்காரமாகப் பணம் பறிக்கிறார்கள் என்றும், நிலச்சுவான்களிடம் பணம் இல்லையேல் அவர்கள் வீட்டுப் பெண்மக்களிடமிருந்தும், நகைகளைத் தரும்படி போலீசார் நிர்ப்பந்தப்படுத்துவதாகவும் தெரிகிறது.

திருவள்ளுவர் சொற்பயிற்சி மன்றம்

19—9—54 மாலை 2 மணிக்கு வேலூர் தி. மு. கழகச் சார்பில் திருவள்ளுவர் சொற்பயிற்சி மன்றம் அமைக்கப்பட்டு நிர்வாகக் குழுவினர் தேர்ந்தெடுக்கப்பட்டனர்: செயலாளர்: இலக்குவனார்; துணைச் செயலாளர்கள்: பாண்டியன், அருள்மணி, பாலகிருட்டிணன்; பொருளாளர்: வே. த. வேலாயுதன். பின்னர் மீ. ச. வீரமணி தலைமையில், திராவிட நாடு பிரிவினை, அரசியல் பற்றி தோழர் முகவை ஆர். எஸ். பாண்டியன் சொற்பொழிவாற்றினார்.

[illegible] அண்ணாதுரை [illegible]